**செய்தி வெளியீடு எண்: 91** **நாள்: 27.01.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (27.1.2012) தலைமைச் செயலகத்தில், 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், தமிழ்நாடு வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்ற மாணவ, மாணவிகள் மற்றும் காது கேளாத, வாய்பேச இயலாத மாற்றுத் திறனாளி மாணவ மாணவிகளுக்கு 18 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களில் மாநில அளவில் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கப் பரிசுகள் வழங்கும் திட்டமும் ஒன்றாகும்.

அதன்படி, 2011–ஆம் ஆண்டு நடைபெற்ற 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு முறையே 25 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்திலும், 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு முறையே 50 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்திலும், மொத்தம் 66 மாணவ, மாணவிகளுக்கு 14 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வனத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் பயின்று 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளை ஊக்குவிக்க பரிசுத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2011–ஆம் ஆண்டு நடைபெற்ற 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு முறையே 25 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய், 15 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்திலும், 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு முறையே 50 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்திலும், மொத்தம் 12 மாணவ,

மாணவிகளுக்கு 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கான ரொக்கப் பரிசுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டதைப் போன்றே, 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காதுகேளாத மற்றும் வாய்பேசாத மாணவ, மாணவிகளுக்கும் ரொக்கப் பரிசு வழங்கிட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். அதன்படி, 2010–2011–ஆம் கல்வியாண்டில் 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் 12–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கும், என மொத்தம் 6 மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் கவனம் செலுத்தி, வாழ்க்கையில் மேன்மேலும் உயர்ந்து நல்ல குடிமக்களாக விளங்க வேண்டும் என்று வாழ்த்தினார்கள். அப்போது, பரிசுத் தொகையினை பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர், மாற்று திறனாளிகள் நலத்துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 27.1.2012